இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 359 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 23– வெள்ளிக்கிழமை 08 ஆகஸ்ட் 2025 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 359 : Thiruvalluvar Year - 2056 - Aadi 23 - Friday 08 August 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.8.2025) பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.8.2025) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, நீர்வளம் மற்றும் சட்டத் துறைஅமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

### 7–ஆம் ஆண்டு நினைவுநாள்! முத்தமிழறிஞர்

# கலைஞரின் நினைவிடம் நோக்கி மாபெரும் அமைதிப் பேரணி!

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பல்லாயிரவர் பங்கேற்பு!



### கலைஞர் ஒளியில் “எல்லார்க்கும் எல்லாம்” - எனும் இலக்கை நோக்கி

# வெற்றிப் பாதையில் நடைபோடுவோம்!

## முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளில் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!



**சென்னை, ஆக. 8 -**

**தமிழ்நாட்டை முன்னேற்றிட உறுதியேற்று கலைஞரின் ஒளியில் “எல்லார்க்கும் எல்லாம்” - “எதிலும் தமிழ்நாடு முதலிடம்” எனும் இலக்கை நோக்கி வெற்றிப்பாதையில் நடைபோடுவோம் என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7-ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் சூளுரைத்துள்ளார்.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**தலைவர் கலைஞர் முத்துவேலரும் அஞ்சுகம் அம்மையாரும் பூமிக்குத் தந்த பிறப்பு!**

**தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் தமிழினத்துக்குத் தந்த நெருப்பு!**

**அவரது சாதனைகளால் சிறப்பு பெற்ற தமிழ்நாட்டைக் காத்திட - முன்னேற்றிட உறுதியேற்று, கலைஞரின் ஒளியில் “எல்லார்க்கும் எல்லாம்” - “எதிலும் தமிழ்நாடு முதலிடம்” எனும் இலக்கை நோக்கி வெற்றிப்பாதையில் நடைபோடுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**சென்னை, ஆக.8-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று அமைதிப் பேரணி நடைபெற்றது. நாடெங்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைகள் - திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி உலகத் தமிழர்கள் மரியாதை செலுத்தினர்.**

தமிழ்நாட்டிற்காக, தமிழ் இனத்திற்காக, தமிழ்மொழிக்காக தன் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்த பெருமகன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு அவர் செய்திட்ட திட்டங்கள் ஒன்றா, இரண்டா பட்டியலிட, ஒவ்வொரு திட்டமும் தமிழ்நாட்டின் வளத்தை தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவே அமைந்திருந்தன.

தமிழ்மொழிக்கு செம்மொழி அங்கீகாரம் கிடைக்கச் செய்து தமிழ்மொழிக்குப் பெருமைச் சேர்த்த திராவிட இயக்கப் பெருந்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் நேற்று!

முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாளினையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச்செயலாளர் துரை முருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொண்ட “அமைதிப் பேரணி”, நேற்று (ஆகஸ்ட் 7 - வியாழக்கிழமை) காலை 7.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இதில் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, உள்ளிட்ட அனைத்து அணியினரும் பங்கேற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றி அஞ்சலி செலுத்தினர்.

**தமிழ்நாடு முழுவதும் திருவுருவச் சிலை - திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை!**

மேலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று (7.8.2025 - வியாழக்கிழமை) தமிழ்நாடு முழுவதும் உலகத் தமிழர்கள் அனைவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை - திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் ஏழை எளியோருக்கு உணவு மற்றும் நல உதவிகளை கழகத்தினர் வழங்கினர்.